30th November 1970]

(3) *Decision of the Business Advisory Committee*

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. today, it has been decided that the Council will adjourn today and meet again at 10 a.m. on 3rd December, 1970 to consider Official Bills.

III. CALLING ATTENTION TO NON-PAYMENT OF SALARY TO STAFF OF GOVERNMENT ARTS COLLEGE FOR WOMEN, BROADWAY FOR OCTOBER, 1970

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, on a point of order. I had given notice on 27th November, 1970 calling the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the failure of the Government to give salary to the staff of Government Arts College for Women, Broadway for the month of October, 1970. I do not know why the Government have not paid the salary for October.

MR. CHAIRMAN : The hon. Member sent the notice on the 27th. It was received in the office on the 28th and it has been sent to the department for furnishing particulars.

THIRU G. VASANTHA PAI : The matter is urgent.

MR. CHAIRMAN : The hon. Member may get the answer probably on the 3rd December, 1970.

IV. INFORMATION *Re* A PRIVATE NOTICE QUESTION

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் பற்றி நான் குறுகிய கால நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அதைக் கேள்வியாகக் கேட்கும்படி முதலமைச்சர் அவர்கள் எனக்கு யோசனை கூறினார்கள். அதன்படி எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் உள்ள பிரத்தியேகமான ஒரு சலுகையை முன்னிட்டு ஒரு கேள்வியைக் கொடுத்திருந்தேன். அதற்கு முதலமைச்சர் 2-ம் தேதி பதிலளிப்பதாக இருந்தார்கள். ஆனால் 2-ம் தேதியன்று முதலமைச்சர் அவர்கள் இருக்க மாட்டார்கள். இந்த நிலைமையில் இருக்கக்கூடிய அமைச்சர்களில் யாராவது ஒரு அமைச்சர் பதில் அளிக்க வேண்மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : எதிர்க் கட்சித் தலைவர் கொடுத்திருந்த கேள்வியை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே அவருடைய கேள்விக்கு முதலமைச்சரவர்கள் பதில் அளிப்பார்கள் என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. கே. ராஜாராம் : நான் குறிப்பிட விரும்புவது 2-ம் தேதியன்று முதலமைச்சர் அவர்கள் இருக்க மாட்டார்கள் என்று கூறப்படுவதனால் வேறு யாராவது அதற்கு பதிலளிக்கப்போகிறார்களா என்பதுதான்.